13

# கொளப்பலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

## முன்னிலை :திரு.சு.சிவகுமார்

க.உ.எண்: 45 /2019 – 2020 நாள்: 27.01.2020

பொருள்: கட்டிட அனுமதி – கொளப்பலூர் பேரூராட்சி – வார்டு எண்:15 வரப்பாளையம் , புதிய க.ச.எண்: 1/2 ல் 4250.00 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் அமையும் (G+3) தளங்களுடன் 112 குடியிருப்புகள் கொண்ட புதிய RCC தார்சு மேற்கூரையுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டடம் கட்ட உரிய வரைபடத்துடன் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டது –புதிய RCC தார்சு மேற்கூரையுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், போயம்பாளையம், திருப்பூர், என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் மற்றும் வரைபடங்களுடன் கூடிய ஆவணங்கள்.

2.திருத்தப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 200,201 பிரிவுகள்.

**ஆணை:**

கொளப்பலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்:15, வரப்பாளையம் , புதிய க.ச.எண்: 1 / 2 ல் 4250.00 சதுர மீட்டர் பரப்பில் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், போயம்பாளையம், திருப்பூர், என்பவர் (G+3) தளங்களுடன் 112 குடியிருப்புகள் கொண்ட புதிய RCC தார்சு மேற்கூரையுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டடம் கட்டிக் கொள்வதற்கு அனுமதி வழங்க பார்வை 1 ல் காணும் விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, வரைபடத்தின் படி, (G+3) தளங்களுடன் 112 குடியிருப்புகள் கொண்ட புதிய RCC தார்சு மேற்கூரையுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு உபயோக கட்டடம் கட்ட கட்டிக்கொள்வதற்கு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இதன் மூலம் அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 27.01.2020 முதல் 26.01.2025 முடிய ஐந்தாண்டுகளுக்கு அமுலில் இருக்கும்.
2. பேரூராட்சி நிலத்தில் அல்லது தெருவில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3. பொதுப்பாதையிலிருந்து 3 மீட்டர் தூரத்தில் நிலையான கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது. சுற்றுச்சுவர் கட்டிக்கொள்ளலாம்.( சுற்றுச்சுவர் 1.8 மீ. மேற்படாமல்)
4. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.
5. அங்கீகாரம் செய்யப்பட்ட பிளானுக்கு எவ்வித மாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன் கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
6. கொடுக்கப்பட்டுள்ள கால அளவுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கவில்லையானால் அதற்கு (30) முப்பது நாட்களுக்கு முன்னதாகவே மனுக் கொடுத்து நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி அனுமதிக் கால வரம்பை நீட்டித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.
7. கட்டிட வேலை நடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர்படுத்த வேண்டும்.
8. கக்கூஸ், சாக்கடை ,தொட்டி முதலியன முறைப்படி தளம் போட வேண்டும். எளிதாகச் சுத்தம் செய்ய மார்க்கம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.
9. சென்னை சுகாதார சட்டப்பிரிவுகள் 26 மற்றும் 33 விதிகளின் படி அத்தாட்சி பெறாமல் மேற்படி கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடி வைக்கவோ கூடாது.
10. கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறிய 15 தினங்களுக்குள் அவ்விபரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுவதுடன் கட்டிடதின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்ப வேண்டும்.
11. தற்போது செலுத்தப்பட்ட தொகை பின்பு குறைவானதெனத் தெரிய வந்தால் உடனே மீதித் தொகையை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும்.
12. மழை நீர் சேகரிக்கும் கட்டமைப்பு கட்டாயம் அமைக்கப்பட வேண்டும்.
13. உத்தேச கட்டிடம் கட்டும் அடிநிலம் குறித்து பின்னர் ஏதேனும் வில்லங்கம் விவகாரம் தெரியவரும் பட்சத்தில் இவ்வங்கீகாரம் செல்லத்தக்கதல்ல.
14. இயந்திரங்கள் நிறுவ உரிய அனுமதி பெற்ற பின்னரே தொழிலை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு தனியாக விண்ணப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்– 2 நகல்கள்.

செயல் அலுவலர்
கொளப்பலூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்.

27.1.2020

பெறுநர்:
நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், போயம்பாளையம், திருப்பூர்.

நகல் : சம்பந்தப்பட்ட வரி வசூலர், மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் கூடுதல் சொத்து வரி விதிப்பிற்கு கொண்டு வர வேண்டியது.

28/01/2020
EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

Scanned by CamScanner

<u>பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்</u>

**<u>நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம், திருப்பூர் அவர்களின் நடவடிக்கைகள்</u>**

**<u>முன்னிலை : திருமதி. க.உமாராணி, பி.இ.</u>**

<u>ந.க. எண். 2241/2019 திம–2</u> <u>நாள்: 05.12.2019</u>

**பொருள்:** அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – திருப்பூர் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிபாளையம் வட்டம்– கொளப்பலூர் கிராமம் – ச.எண். 1/2–ல் அமையும் 0.42.50 Hectare பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2 பிளாக்குகளில் 112 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு தொழில்நுட்ப முன் இசைவு வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**

1. செயல் அலுவலர், கொளப்பலூர் பேரூராட்சி அவர்களின் கடிதம் எண்.227/2019, நாள். 30.09.2019.
2. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் அவர்களின் கடிதம் எண்.123/இஉ/ தி.கோ./2019, நாள். 04.12.2019.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள். 16.04.2009.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள். 04.04.2012
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/spl.cell, நாள். 28.09.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள் 14.12.2017.
7. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 02.12.2019.
8. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019.
9. அரசாணை எண். 18, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.02.2019.
10. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் மூ.மு.எண்.12153/அ1/2018, நாள். 05.02.2019.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/ந.ஊ.2, நாள். 31.10.2019.

---

<u>ஆணை :</u>

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், மற்றும் கொளப்பலூர் கிராமம், ச.எண். 1/2–ல் அமையும் 1.05 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2 பிளாக்குகளில் 112 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் அமையும் மனைக்கு 'A to F' என எல்லையிட்டு மவ/ந.ஊ.(திம) எண்.62/2019 என எண்ணிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.(திம) எண்.16/2019 என எண்ணிட்டு தொழில்நுட்ப முன் இசைவு வழங்கப்படுகிறது.

இறுதி ஒப்புதலை வரைபடங்கள் உட்பட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருப்பூர் மண்டலம், திருப்பூர்.

<u>பெறுநர்:</u>
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம், திருப்பூர் – 641 602

<u>நகல்:</u>
செயல் அலுவலர்,
கொளப்பலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

Executive Engineer
TNSCB
Tiruppur Division

Scanned by CamScanner

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
## திருப்பூர் கோட்டம்
## நிர்வாகப் பொறியாளர்
## அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை :**

ந.க.எண். நாள்:

பொருள் : ஒதுக்கீடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் - அனைவருக்கும் வீடு திட்டம் **திட்டப்பகுதியில்** குடியிருப்பு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை : 1. வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் ந.க.எண்.
நாள் :

ஆணை

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மாண்புமிகு பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் - திட்டப்பகுதியில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு எண். **திரு/திருமதி.** **(ஆதார் எண்.** ) பெயரில் கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1.அ. ஒதுக்கீடுதாரர் குடியிருப்பை ஒப்படை செய்வதற்கு முன் பயனாளிகளின் பங்களிப்பு தொகை ரூ. /-ஐ பராமரிப்பு தொகை மாதம் ரூ. /- வீதம் மாதங்களுக்கு ரூ. /- முன் பணமாகவும், பதிவு மற்றும் இதர கட்டணங்களாக ரூ. /-ஐயும் செலுத்தும் போது வசித்து வரும் ஆக்கிரமைப்பு குடிசையை அப்புறப்படுத்தி விட்டு அதற்கான சான்றிதழினை உதவிப் பொறியாளரிடம் பெற்ற பின்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பு ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆ. எக்காரணத்தைக் கொண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டவருடைய குடும்ப அங்கத்தினர்கள் பெயரிலோ அல்லது உறவினர்கள் பெயரிலோ அல்லது மற்ற எந்த நபர் பெயரிலோ ஒதுக்கீடு மாற்றம் செய்யப்பட மாட்டாது.

2.அ. பராமரிப்பு மற்றும் இதர பொதுப்பணிகளை கவனித்துக் கொள்ளும் பொருட்டு இத்திட்டப்பகுதியில் உள்ள ஒதுக்கீடுதாரர்கள் குடியிருப்புகளுக்காக குடியிருப்போர் நலச்சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டதும் (வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்டது) ஒதுக்கீடுதாரர் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகி அதன் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

ஆ. சங்கம் பதிவு செய்த பின்சங்கம் நிர்ணயம் செய்யும் மாதாந்திர பராமரிப்பு தொகையை பிரதி மாதம் 10-ஆம் தேதிக்குள் ஒதுக்கீடுதாரர் சங்கத்திற்கு நேரிடையாக செலுத்த வேண்டும். பராமரிப்பு பணியினை சங்கமே தொடர்ந்து செயல்படுத்தும்.

இ. அரசு/ஊராட்சி அமைப்பு / கு.மா.வாரியம் அவ்வப்போது நடைமுறைப்படுத்தும்/ விதிக்கும் வரிகள், பராமரிப்பு கட்டணம், மின் கட்டணம், குடிநீர் மற்றும் கழிவு நீர் போன்ற இனங்களுக்கான தொகையை ஒதுக்கீடுதாரரே செலுத்த வேண்டும்.

3. ஒதுக்கீடுதாரர் பெயரில் குடியிருப்பிற்கான மின் இணைப்பை பெற்றுக் கொள்ள மின்சார வாரியத்தை அணுக வேண்டும். மாதாந்திர மின் கட்டணத் தொகையினை ஒதுக்கீடுதாரரே செலுத்த வேண்டும். விதிகளுக்கு புறம்பாக மின்இணைப்பு பெற்றுள்ளதாக பின்னர் தெரிய வந்தால், மின் இணைப்பு துண்டிக்கப்படுவதோடு ஒதுக்கீடு ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. இக்குடியிருப்பு தேவையில்லை எனில் அதனை வாரியத்திடம் மட்டுமே ஒதுக்கீடுதாரர் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

Scanned by CamScanner

125

5. ஒதுக்கீடுதாரர் காலமாகிவிட்டால் கணவர்/மனைவி அல்லது அவரது நேரடி வாரிசுதாரர்கள் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்து மனு செய்தால் உரிய ஆய்வுக்குப் பின் தகுதி இருப்பின் வாரிசுதாரர் பெயரில் பெயர் மாற்றம் செய்ய பரிசீலிக்கப்படும்.

6. ஒதுக்கீடுதாரர் குடியிருப்பை வேறு நபருக்கு விற்கவோ, வசிக்க அனுமதிக்கவோ வாடகைக்கு அனுமதிக்கவோ அல்லது வேறு எந்த வகையிலும் பயன்படுத்தவோ கூடாது. மீறினால், எந்தவித முன் அறிவிப்புமின்றி ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்படுவர். அத்துடன் ஒதுக்கீடுதாரர் மற்றும் அவரது குடும்ப அங்கத்தினர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டு இனிவரும் காலங்களில் வாரியம் மூலமாக எந்தவிதமான சலுகையும் பெற தகுதியற்றவர் எனவும் அறிவிக்கப்படும்.

தவிர ஒதுக்கீடுதாரர் குடியிருப்பில் வசிக்காமல், வேறு நபருக்கு வாடகைக்கு அல்லது உள்வாடகைக்கு அல்லது விற்பனை செய்திருப்பது தெரியவந்தால் உடனடியாக குடியிருப்பின் மீதான ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதோடு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971 சட்டபிரிவு 62(பி)ன்படி மூன்றாண்டு காவல் தண்டனை மற்றும் ரூ.1000/- அபராதம் விதிக்கப்படும்.

7. ஒதுக்கீடு விதிகளை கீழ்கண்ட விதங்களில் மீறியுள்ளதாக தெரியவந்தால் ஒதுக்கீட்டாணை ரத்து செய்வதோடு குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு குடியிருப்பை வாரிய வசமாக்கி, மீறியவர் மீது கிரிமினல் மற்றும் சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அ. வாரிய குடியிருப்புகளில் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

ஆ. ஒதுக்கீடு செய்த இடத்திற்கு அதிகமாக ஆக்கிரமித்தல்.

இ. குடியிருப்பில் மாற்றம் செய்தல் அல்லது விரிவுபடுத்தல்.

ஈ. ஒதுக்கீடு செய்த குடியிருப்பு தவிர சொந்தமாக வேறு வீடு (அ) மனை அல்லது வேறு இடத்தில் வைத்திருத்தல்.

உ. தவறான தகவல் தந்து ஒதுக்கீடு பெற்றிருத்தல்.

ஊ. ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பை சரியாக பராமரிக்காமல் பழுதடைந்த நிலையில் வைத்திருத்தல்.

எ. சுற்றுச் சூழலையும் பேணாது, சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் வைத்திருத்தல்

ஏ. வாரிய சொத்திற்கு சேதம் விளைவித்தல்.

8. ஒதுக்கீடுதாரர் தொடர்ந்து குடியிருப்பில் வசிப்பதாக கண்டறியப்பட்டால் நிபந்தனைக்குட்பட்டு கிரயப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. ஒதுக்கீடுதாரருக்கு வழங்கப்பட்ட இந்த ஒதுக்கீடு உத்தரவு தேவைப்படும் போது வாரியத்தின் பார்வைக்கு தவறாமல் காண்பிக்கப்பட வேண்டும்.

10. வாரிய விதிகளின்படி ஒதுக்கீடுதாரர் குடியிருப்பை எவருக்கும் விற்பனை மற்றும் அடமானம் செய்தல் கூடாது

பெறுநர்

திரு/திருமதி.

த/பெ.

07/02/2020

EXECUTIVE ENGINEER
TNSCB, Tiruppur Division.

நிர்வாகப்பொறியாளர்,
திருப்பூர் கோட்டம்.

Scanned by CamScanner